எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# NEWREC

3 செப்டம்பர் 2017
பொது காலம்
22ம் ஞாயிறு



# என்னில் உன்னை இழந்து விடு

BUL 36/2017



“இறைவன் நம்மை ஏந்தி கொள்ள அனுமதிப்பதும், அவரை மற்றவர்களிடம் கொண்டு செல்வதும், ரகசியங்களில் தலையாய ரகசியம்”

- திருத்தந்தை 23ம் அருளப்பர்

“உன்னை இழந்து பார், உன்னைக் கண்டடைவீர்” என இணைய எழுத்தாளர் ஆதாம் ஓக்லெயின் எழுதியுள்ளார். மகாத்மா காந்தியும், “ பிறர் சேவையில் உன்னை இழந்தால் நீர் யாரென்று கண்டு கொள்வாய்” என கூறியுள்ளார். உண்மையே! இரண்டுக்கும் விவிலியமே ஆதாரம். மத்தேயு 10 அதிகாரத்தில் இயேசு கூறுகிறார், "தன் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர்" (10:39). சீடத்துவத்திற்கான நிபந்தனைகளை இயேசு சுட்டிகாட்டுகிறார். தன்னையே மறுப்பது, ஒருவரின் வாழ்வுக்கு மையம். இயேசு கூறுகிறார்: என்னில் உன்னை இழந்து விடு.

“நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்...என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது” (யோவான் 15:4–5). ஆண்டவரின் ஆவி, வார்த்தை, அன்பில், நமது எல்லாச் சிந்தனையும் செயலும் இருந்தால், நம்மையே நாம் அறிந்து கொள்ள முடியும். அவரின் நிழலில் தங்கியிருந்தால், அவரில் நம்மை காணலாம் (சங்.91:1–9), ஏனெனில் அவரது சாயலில் நாம் படைக்கப்பட்டோம் (தொநூ,1:26–27).

சமுதாயத்திற்கு நாம் ஆற்றும் பங்கை வைத்து, நம்மைப் பற்றி பிறர் அறிந்திடுவது, வழக்கமான ஒன்று. இந்த மாதிரியான போக்கையும் தீர்மானத்தையும் நாம் அனுமதிக்கிறோம். சாதனைப் படைத்தோர், விளம்பரம் தேடுவோர், அனைவரும் இம்மாதிரியான புகழுக்கும் பூமாலைகளுக்கும் ஏங்குகிறோம். ஏன்? நமது சுயநல வேட்கையே இதற்கு காரணம். இதனால் நாம் தன்னிறைவு அடைந்து கொள்கிறோம். ஆனால் மற்றவர்களைப் பற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை,

ஆயினும், இயேசு இம்மாதிரியாக பிறருக்கும், கடையோருக்கும் சேவை செய்யவே இயேசு வந்தார். இறையரசில் இவர்கள் அனைவரும் வெற்றிப் பெற்றவர்கள். கடவுளின் இரக்கத்திற்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட இவர்கள், தாழ்ச்சியும் ஏழ்மை உள்ளமும் கொண்டவர்கள். கடவுளின் சித்தத்திற்கு அடிபணியும் இறைவாக்கினர் எரேமியாவின் தாழ்ச்சியை இன்றைய வாசகத்தில் காண்கிறோம். மக்களின் நிராகரிப்பின் வேதனையை சுமையைப் போக்க கடவுளின் சித்தத்தில் உதவியை நாடுகிறார். அவ்வாறே உரோமையர் 12: 1–2ல், நமது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது, “உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதா...கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள்”, அவரில் எது சரி என்பதை செய்வீர். பிறர் சேவையில் தன்னை இழந்து முழு அர்ப்பணிப்புக் காட்டுவீர் – அவரது புதிய அன்புக் கட்டளையில் தன்னையே இழப்போம்.

உடல், பொருள், ஆவி அனைத்தையும் நாள்தோறும் கடவுளுக்கு உகந்த வாழ்க்கையை வாழ்வதே, வாழ்வை மாற்றும் கடவுளின் அன்பை முழுமையாக அணைத்துக் கொள்வதே, அவரில் தன்னை இழப்பதாக அமையும். தோட்டத்தில் இடுக்கமான வாயிலின் வழியே நடப்பது போலன்று இந்த அழைப்பு. வாழ்வுக்கு இட்டுச் செல்லும் சாலை அகன்றதல்ல. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே(மத்.7:13). ஆனால், நம்பிக்கையின் சீடர்கள் என்ற முறையில இறைவாக்கினர் ஆகாய் 1:7 முறையில் மற்றும் நீதிமொழிகள் 4:26 மூலம் ஆண்டவர் கூறுவது போல நமது வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்ளத் தொடங்குவோம்.✢

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY




**மினவுதல் மாதா தேவாலயம்**
85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்


*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**

*2017 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*

*தன்னலத்தை மிஞ்சிய உருமாற்றத்தை அளிக்கிறது*

**மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**

**( 1848 – 2018 )**

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 22 ஆம் ஞாயிறு சனி 02-09-2017 ஞாயிறு 10-09-2017
எரே 20: 7-9 தி.பா 62: 2, 3-4, 5-6, 8-9 உரோ 12: 1-2, மத் 16: 21-27
**கடவுளே ! என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது. ( சங் 62 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. மார்த்தா) | |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் (ம.கல்வி – ஆரம்பபள்ளி)<br>திருப்பலி ஆங்கிலம் (ம.கல்வி – ஆரம்பபள்ளி)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறமாட்டாது<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 04 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 05 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 06 | 6.45 கா | திருப்பலி | **மாலை 7.30 மணி. அ.தி.ச ஒருங்கிணைப்பாளர் ஒன்றுகூடல்** |
| வியா | 07 | 6.45 கா | திருப்பலி | |
| வெள் | 08 | **அன்னை மரியாளின் பிறந்த நாள்: மாலை 7.30 மணி செபமாலை /நவநாள் / நற்கருணை ஆராதனை / திருப்பலி** | | |

**பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**
எசே 33: 7-9 தி.பா 94: 1-2, 6-7, 8-9 உரோ 13: 8-10, மத் 18: 15-20
**உங்கள் இதயத்தை கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் ( சங் 94 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. மார்த்தா) | |
| ஞாயி று | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி தமிழ் (ம.கல்வி – இடைநிலைப் பள்ளி)<br>திருப்பலி ஆங்கிலம் (ம.கல்வி–இ.நிலைப்பள்ளி)<br>திருப்பலி சீனமொழி<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 செப்டெம்பர் (புரட்டாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1. **ஆலய காணிக்கை** 26/27 ஆகஸ்ட் ரிம: 9,260.05
   தித்தி திருவிழா திருப்பலி ரிம:1,918.70
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
2. **02/03 திருப்பலிகளில் இரண்டாவது காணிக்கை**
   சமூக அக்கறைப் பணிக்குழுவினருக்காக எடுக்கப்படும் இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
3. **திருப்பலிக்கு முறையாக உடை உடுத்தி வருவோம். பெண்கள்:** முழங்கால் வரை உள்ள குட்டை கால்சட்டை, உடல் தெரியும்படி இருக்கும் கை இல்லாத சட்டைகள், ஜப்பான் காலணி ஆகியவற்றை உடுத்திவருவதை தவிர்க்கவும் **ஆண்கள்:** முழங்கால்வரை உள்ள குட்டை கால்சட்டை, உள்பனியன் மற்றும் ஜப்பான் காலணி ஆகியவற்றை உடுத்திவருவதை தவிர்க்கவும்

திருமணம்: ஜெறோம் ஞானரத்னம் & ஷாலினி என் ராஜா 09-09-2017 மாலை 03.30 மணி (ஆங்கிலம்)

- **குடியேற்றவாசிகளின் ஞாயிறு 24 செப்டம்பர் 2017**
  **கருப்பொருள்: குழந்தை குடியேற்றவாசிகள்: பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் குரலெழுப்ப முடியாதவர்கள் திருப்பலி காலை 9.00மணி குடியேற்ற வாசிகளின் வாழ்க்கையை சித்தரிக்கும் ஒரு கண்காட்சி கார் நிறுத்தும் இடத்தில் விசிடேஷன் பார்லர் அருகே காட்சிக்கு வைக்கப்பட உள்ளது. அனைவரையும் வரவேற்கிறோம். குடியேற்றவாசிகள் உள்ள அதிச கள் அவர்களை இந்ததிருப்பலிக்கு அழைத்துவருமாறு கேட்டுகொள்கிறோம்.**

- **காடோங் அன்னை வேளாங்கண்ணி திருவிழா**
  - **08/09 (வெள்ளி) மாலை 7.30 செபமாலை, நோயில் பூசுதல், தொடர்ந்து திருப்பலி**
  - **09/09 (சனி) மாலை 6.00மணி செபமால, திருப்பலி / பவனி / நற்கருணை ஆசீர்**
  - **10/09 (ஞாயிறு) காலை 10.30 மணி திருவிழா திருப்பலி**

*மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.*
பெனடிக் தாஸ் - இறப்பு 28-08-2017
முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!

- **மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டு நிறைவை நோக்கி:**
  - **கோ மேட் 2: செப்டம்பர் 16, (மலேசிய தினம்)** காலை 8.00 - 4.00 வரை அன்றைய தினம் நிகழ்ச்சி மாலை 6.00 மணி மலேசியாவிற்கான சிறப்பு செபம், திருப்பலியோடு நிறைவு பெறும். அனைவரும் வருக.
  - **மலேசிய கொடியைச் செய்வோம்**
    அனைத்து பங்கு மக்களையும் மலேசியகொடியை உருவாக்க அழைக்கிறோம். உங்களுடைய விரல்களால் வண்ணம் பூசி மலேசிய கொடியை அலங்கரிக்க அழைக்கிறோம். இந்த மலேசிய கொடி நம்முடைய கோ மேட் 2 நிகழ்ச்சியின் மேடையின் பின்புறம் அலங்கரிக்கப்படும். வார இறுதி திருப்பலிக்குப்பின் மலேசியகொடியில் வண்ணம் பூச உங்களை அழைக்க்கிறோம். இடம் விசிடேஷன் பார்லர் கார் நிறுத்துமிடத்திற்கு எதிரில்.
  - **நடனத்துடன் கூடிய விருந்து:மலேசிய தினம்: செப்டம்பர் 21 (வியாழன்)** பொதுவிடுமுறைக்கு முந்திய நாள். பங்கு மக்கள் அனைவரையும் இதில் கலந்து முழு ஆதரவு தருமாறு அ ழைக்கிறோம். டிக்கெட்டுகள் விற்பனைக்கு உள்ளன. திருப்பலிகளுக்குப் பின் ஆலய வளாகத்தில் மற்றும் அதிச/ சோன் பொறுப்பாளர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம். தொடர்புக்கு ஜெரோம்: 019-7908071
  - **அனைத்து அதிச/சோன் பொறுப்பாளர்களை அழைக்கிறோம்.** நடனத்துடன் கூடிய விருந்து மற்றும் கோ மேட் டிக்கெட்டுகளை விற்பனை செய்ய அழைக்கிறோம். நண்பர்கள், அதிச வில் உள்ள பிற சமயத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் அழையுங்கள்.

- **படைப்புக்காக உலகின் செப நாள்:செப்டம்பர் 1** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுற்றுப்புறத்தைப் பற்றி அக்கறை கொள்ள நம்மை அழைக்கிறார். செப்டம்பர் 1 - அக்டோபர் 4 வரை, உலகெங்கும் உள்ள கிறிஸ்துவர்கள் படைப்பைப்பற்றி பேசவும் அதற்காக செபிக்கவும் அழைக்கப்படுகிறோம். இதற்கென உள்ள அகப்பக்கத்திற்கு சென்று செபத்தில் இணையுங்கள்.
  http://seasonofcreaion.org/http://seasonofcreation.org/onlineevents/
  திருப்பலியில் ஒன்றிணையவும், படைப்பில் அக்கறை (லாடாதோ சி ) கொள்ளவும், இணையுங்கள். இதனை யொட்டி கம்போங் செபிரில் மரம் நடும் நிகழ்வு நடைபெறுகிறது. படைப்பில் அக்கறை கொள்ள் உறுதி எடுத்துக்கொள்வோம்.

- **உலக பூர்வீக குடிமக்கள் நாள் 2017 செப்டம்பர் 16 & 17 ஆகிய தேதிகளில் பங்கில் இதனையொட்டி கண்காட்சி நடைபெற இருக்கிறது.** பூர்வீக குடிமக்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசீர் உரித்தாகுக!

- **குருக்களின் ஆண்டு தியானத்திற்காக நம்முடைய குருக்கள் செல்லவிருக்கிறார்கள்.** அவர்களை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.
  அருள்திரு. ஜோர்ஜ் ஹாரிசன்: 03-09-2017 - 08-09-2017
  அருள் திரு. அண்ட்ரூ கூய் 10-09-2017 - 15-09-2017

- **அன்னை மரியாளின் பிறந்த நாள்:08-09-2017** மாலை 7.30 மணி செபமாலை / நவநாள் / நற்கருணை ஆராதனை / திருப்பலி

- **அருள்திரு. மரி ஆரோக்கியம் அவர்களின் குருத்துவ 25 ஆம் ஆண்டு நிறைவு:** 08-09-2017 (வெள்ளி) மாலை 6.30 மணிக்கு பெட்டாலிங் ஜெயா விண்ணேற்ற ஆலயத்தில் நடைபெறும். 09-09-2017 (சனி) காலை 10.30 மணிக்கு கம்போங் பண்டான் ஆரோக்கிய அன்னை சிற்றாலயத்தில் திருப்பலி நடைபெறும். இவரை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

- **லூத்தரன் திருச்சபையின் 500 ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்டம்: முரண்பாட்டிலிருந்து ஒன்றிப்பு** - மாநாடு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் நடைபெறுகிறது. நாள்: 22-09-2017 (வெள்ளி) பொது விடுமுறை நாள்: காலை 9 - 4 வரை (ஆங்கிலம்)
  மாண்டரின் 23-09-2017 (சனி) காலை 9-1 வரை (லூத்தரன் செண்டர், பெட்டாலிங் ஜெயா) தொடர்புக்கு: கிறிஸ்டோபர் கே.(019-6126194)

- **சோய்ஸ்: 100 கோலாலம்பூர் (ஆங்கிலம்)** 23 - 40 வயதுவரை உள்ள திருமணமாகாத இளைஞர்களை அழைக்கிறோம். நாள்: 22-24 செப்டம்பர் 2017 நடைபெறும் இடம் APC கோலாலம்பூர் தொடர்புக்கு: அண்ட்ரூ (016-336 6050) அஷ்லி (017-331 0275) அல்லது www.choicekl.org காணுங்கள்